கச்சத்தீவு மீட்கப்படும்: அண்ணாமலை உறுதி

பல்லடம், மார்ச் 31: பிரதமர் மோடி தலைமையில் மீண்டும் மத்தியில் ஆட்சி அமையும்போது கச்சத்தீவை மீட்கப்படும் என்று தமிழக பாஜக தலைவரும் அக்கட்சியின் கோவை தொகுதி வேட்பாளருமான கே.அண்ணாமலை கூறினார்.

பல்லடம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உள்பட்ட பொங்கலூர் ஒன்றிய பகுதியில் பல்வேறு கிராமங்களில் ஞாயிற்றுக்கிழமை பிரசாரம் மேற்கொண்ட கோவை மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் கே.அண்ணாமலை பேசியதாவது:

பெரிய மாற்றத்துக்காக அனைவரும் தயாராகிக் கொண்டிருக்கிறோம். கோவை மக்களவைத் தொகுதியின் நீண்ட நாள் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணத்தில் களத்தில் நிற்கிறேன்.

இலவசமாக குழாய் மூலம் குடிநீர் வர வேண்டும் என்பது அனைவரது கனவு. இதற்கு பிரதமர் மோடியின் பிரதிநிதி இல்லாததே காரணம்.

ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் ஒரு அலுவலகம் அமைத்து இ-சேவை மைய வசதி ஏற்படுத்தப்படும். மக்கள் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படும்.

100 நாள் வேலைத் திட்டத்தில் தொழிலாளர்களுக்குத் தற்போது ரூ.319 ஊதியம் வழங்கப்படுகிறது. மீண்டும் பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்ததும் இது ரூ.500-ஆக உயர்த்தப்படும்.

வாக்குக்குப் பணம் கொடுக்க மாட்டேன். ஒரு மனிதனை மலிவுபடுத்தி வாக்கைப் பெறக்கூடாது என்றார்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அண்ணாமலை கூறியதாவது:

1974-ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, இலங்கை அதிபர் சிறீமாவோ பண்டாரநாயகா ஆகியோரிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் மூலம் கச்சத்தீவை தாரை வார்த்து கொடுத்தனர். முதலில் இந்திய மீனவர்கள் தங்களது மீன்பிடி வலைகளை கச்சத்தீவில் உலர்த்தி கொள்ளலாம் என்று ஒரு ஷரத்து இருந்தது. பின்னர் அதனை நீக்கி விட்டனர்.

கச்சத்தீவைத் தாரை வார்த்து கொடுத்ததன் மூலம் நாட்டுக்கு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியும், அப்போதைய முதல்வர் கருணாநிதியும் துரோகம் செய்துள்ளனர்.

மோடி ஆட்சி மீண்டும் அமையும்போது கச்சத்தீவை மீட்போம் என்றார்.

வேலை அடிப்படை உரிமையாக்கப்படும்

இந்திய கம்யூனிஸ்ட் தேர்தல் அறிக்கையில் அறிவிப்பு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையை சென்னையில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு, மாநிலச் செயலர் இரா.முத்தரசன். உடன், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலர் சி.எச்.வெங்கடாசலம், துணைச் செயலர் நா.பெரியசாமி, சிறுபான்மை பிரிவு மாநிலத் தலைவர் வகிதா நிஜாம், சமூக சமத்துவத்துக்கான மருத்துவர்கள் சங்கத்தின் பொதுச் செயலர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் உள்ளிட்ட நிர்வாகிகள்.

சென்னை, மார்ச் 31: வேலைவாய்ப்பு வழங்குவதை அடிப்படை உரிமையாக்க அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவை தேர்தலை முன்னிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை சென்னை தியாகராய நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. தேர்தல் அறிக்கையை கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு வெளியிட, தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.எச்.வெங்கடாசலம் பெற்றுக்கொண்டார். இதில் மாநிலச் செயலர் முத்தரசன் மற்றும் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு: தில்லியில் விவசாயிகளின் முற்றுகையின் போது மத்திய அரசு உறுதியளித்து, நிறைவேற்றத்தவறிய அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றுவதுடன், எம்.எஸ். சாமிநாதன் குழு பரிந்துரைகளும் முழுமையாக அமல்படுத்தப்படும்.

விளைபொருள்களுக்கு உற்பத்தி செலவைவிட குறைந்தபட்சம் 50 சதவீதம் கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்படுவதுடன், விவசாயிகளின் அனுமதி இல்லாமல் நிலத்தை கையகப்படுத்துவது நிறுத்தப்படும்.

மேலும், விவசாய நிலங்களை பாதுகாக்கவும், நிலப்பயன்பாட்டை ஒழுங்குப்படுத்தவும் புதிய கொள்கை உருவாக்கப்படும். 60 வயதான விவசாயிகள், விவசாயத்தொழிலாளர்கள், கைவினைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும். நில உச்சவரம்பு சட்டத்தை அமல்படுத்தப்படுவதுடன், உபரி நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் வழங்க வழிவகை செய்யப்படும்.

வேலையை அடிப்படை உரிமையாக்குதல்: அனைவருக்கும் வேலை வழங்குவதை உத்தரவாதமாக்க ஏதுவாக, அரசியலமைப்பு சட்டத்தை திருத்தி வேலை உரிமையை அடிப்படை உரிமையாக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அனைத்துத்துறைகளிலும் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதுடன், இளைஞர்களின் முன்னேற்றத்தை உறுதி செய்ய தேசிய இளைஞர் கொள்கை உருவாக்கப்படும்.

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை ரூ.26,000-ஆக நிர்ணயம் செய்வதுடன், அனைத்துத் தொழிலாளர்களுக்கும் மாதம் ரூ.9000 ஓய்வூதியமாக வழங்கப்படும்.

தெருவோர வியாபாரிகள், புலம்பெயர் தொழிலாளர்களின் பிரச்னைகளை ஆய்வு செய்து அவர்களை பாதுகாப்பதற்கான சட்டம் அமல்படுத்தப்படும்.

மகளிருக்கு 33 சதவீதம்: பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 33 சதவீதம் இடஒதுக்கீடு கிடைக்க சட்டம் இயற்றுவதுடன், அவர்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதுடன், பெண்களுக்கு ஆதரவான சட்டங்கள் சரியாக அமல்படுத்துவதை கண்காணிக்கவும், பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில், நீதிமன்றங்கள், விரைவுநீதிமன்றங்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். அனைத்து சமூக திட்டங்களுக்கும் ஆதார் அட்டை தேவையில்லை என்ற நடைமுறை கொண்டுவரப்படும். வருமான வரி செலுத்துபவர்களை தவிர அனைத்து முதியவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதுடன், அனைத்து மாவட்டங்களிலும் முதியோர் இல்லங்கள் அமைத்து, அங்கு சலுகை விலையில் உணவு கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

அக்னிவீர் திட்டம் ரத்து: இந்திய முப்படைகளில் 4 ஆண்டுகள் மட்டுமே பணியாற்றும் அக்னிவீர் திட்டத்தை ரத்து செய்யவேண்டும்.

நதிகளை இணைப்பது குறித்து பொதுவான ஒரு கருத்தை உருவாக்கி, காடுகள், ஆற்றுப்படுகைகள், நீர் நிலைகளில் மணல், மண் உள்ளிட்டவற்றை சமானிய மக்கள் தேவைகளுக்கு பயன்படுத்துவது முறைப்படுத்தப்படும். குடியுரிமை திருத்தச்சட்டத்தை ரத்து செய்வதுடன், காஷ்மீர் மாநிலம் இரண்டாக பிரிக்கப்பட்டதையும் ரத்து செய்து, அங்கு தேர்தல் நடத்தி மாநில அரசு நிறுவப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ளன.

தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் இரா. முத்தரசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மத்திய பாஜக அரசு அளித்த வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. முதல்வர் மு.க.ஸ்டாலின் தில்லியில் பிரதமர் மோடியை நேரில் சந்தித்து தமிழகத்துக்கு ரூ. 37,000 கோடி வெள்ள நிவாரண நிதி வழங்கக் கோரினார். ஆனால், மத்திய அரசு ஒரு காசுகூட நிதி வழங்கவில்லை. இது தமிழக மக்களை வஞ்சிக்கும் செயல். மத்திய அரசு கொடுக்கும் அழுத்தத்தால் நீதிமன்றம், தேர்தல் ஆணையம் ஆகிய அமைப்புகளால் சுதந்திரமாக செயல்பட இயலவில்லை. இதன் மூலம் தேர்தல் ஆணையத்தின் நடுநிலைத் தன்மை மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் பத்திரங்கள் மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழலில் பாஜக அரசு ஈடுபட்டுள்ளது.

பாஜக மூன்றாவது முறை மத்தியில் ஆட்சி அமைத்தால் இந்திய அரசியலமைப்பு சட்டம் மற்றும் மதச்சார்பின்மை குழிதோண்டி புதைக்கப்படும். வரும் மக்களவைத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்றார் அவர்.

காலமானார்
ஆர்.பத்மாவதி (80)

கோவை, மார்ச் 31: ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அருகே உள்ள ரங்கசமுத்திரத்தை சேர்ந்த ஆர். பத்மாவதி (80) உடல்நலக் குறைவால் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவருக்கு கணவர் கே.எஸ்.ராமகிருஷ்ணன், தினமணி நாகை பதிப்பில் தலைமை உதவி ஆசிரியராகப் பணிபுரியும் ஆர்.வேல்முருகன் உள்ளிட்ட இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் உள்ளனர்.

இவரது இறுதிச் சடங்குகள் சத்தியமங்கலத்தில் உள்ள இல்லத்தில் திங்கள்கிழமை (ஏப்.1) நடைபெறுகின்றன. தொடர்புக்கு: 63796 17290.

தேசிய நதிகளை இணைக்க தமாகா துணை நிற்கும்

தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் ஜி.கே.வாசன்

சென்னை, மார்ச் 31: தேசிய நதிகள் இணைப்பு திட்டத்துக்கு தமாகா துணை நிற்கும் என்று அக்கட்சியின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் தமாகா தேர்தல் அறிக்கையை அக் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டார்.

அதில் இடம்பெற்றுள்ள அம்சங்கள்:

தேசிய அளவிலான நதிகளை இணைக்கும் மத்திய அரசின் முயற்சிக்கு தமாகா துணை நிற்கும்.

அதைப்போல மாநிலத்தில் ஓடும் நதிகளை இணைத்திடவும் தமாகா குரல் கொடுக்கும். காவிரி மற்றும் பாலாற்றில் மழை வெள்ள காலங்களில் பல டிஎம்சி தண்ணீர் வீணாக கடலில் கலப்பதைத் தடுத்து தடுப்பணைகள் கட்டி முறையாகப் பயன்படுத்த குரல் கொடுக்கும்.

மத்திய அரசுடன் இணைந்து மதுவிலக்கால் ஏற்படும் நிதி நெருக்கடியைச் சரி செய்து பூரண மதுவிலக்கை கொண்டு வர பாடுபடும். போதைப்பொருள்களும் முற்றிலும் ஒழிக்கப்படும். வேளாண் பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மரண தண்டனை வேண்டும்: குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்பதை மத்திய அரசு சட்டவடிவமாக்க துணை நிற்போம்.

சிறுபான்மை முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 5 சதவீத இடஒதுக்கீடு பெற்று தர துணை நிற்போம். மத்திய அரசின் பள்ளிகளான நவோதயா, கேந்திரிய வித்யாலயா போன்ற பள்ளிகளில் கட்டாயத் தமிழ் பாடத்துடன் கூடிய கல்வி முறையை தமிழகத்தில் அமல்படுத்த பாடுபடுவோம்.

மேகேதாட்டுவில் கர்நாடகம் அணை கட்டுவதை முழுமையாக எதிர்ப்போம். திருக்குறளை தேசிய நூலாக்க வலியுறுத்துவோம் உள்ளிட்ட 23 அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

ஏப்.3 முதல் வைகோ பிரசாரம்

சென்னை, மார்ச் 31: மதிமுக பொதுச்செயலர் வைகோ ஏப்ரல் 3-ஆம் தேதி முதல் மக்களவைத் தேர்தலுக்கான பிரசாரத்தைத் தொடங்கவுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் மதிமுக திருச்சி தொகுதியில் போட்டியிடுகிறது. இந்த நிலையில் வைகோ ஏப்ரல் 3-இல் தென்சென்னையில் சைதாப்பேட்டை ஜாபர்கான் பேட்டையில் பிரசாரத்தைத் தொடங்கி ஏப்ரல் 16-இல் கோவையில் நிறைவு செய்கிறார்.

வைகோவின் மகன் துரை வைகோ போட்டியிடும் திருச்சி தொகுதியில் ஏப்ரல் 6, 7, 8, 9 ஆகிய தேதிகளில் 4 நாள்கள் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.

காங்கிரஸ் பார்வையாளர்கள் நியமனம்

சென்னை, மார்ச் 31: மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் போட்டியிடும் 9 தொகுதிகளுக்கு அக்கட்சியின் சார்பில் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் 9 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்த 9 தொகுதிகளுக்கு மூத்த நிர்வாகிகளைப் பார்வையாளர்களாக அக்கட்சியின் தலைவர் செல்வப்பெருந்தகை ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். அதன்படி,

திருநெல்வேலி - தங்கபாலு, கடலூர் - எம்.கிருஷ்ணசாமி, மயிலாடுதுறை - கே.எஸ்.அழகிரி, விருதுநகர் - கே.ஆர்.ராமசாமி, கன்னியாகுமரி - ராமசுப்பு, கிருஷ்ணகிரி - தணிகாசலம், பி.கோபி, சிவகங்கை - எம்.என்.கந்தசாமி, கரூர் - பி.தீர்த்தராமன், திருவள்ளூர் - எஸ்.எம்.இதயத்துல்லா, துரை சந்திரசேகர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

PUBLIC NOTICE
Format C-2

(For political party to publish in newspaper, TV and website)

Declaration about criminal antecedents of candidates set up by the party. (As per the judgment dated 25th September, 2018 of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

Name of Political Party : Communist Party of India (Marxist)
Name of Elections : General Elections to Lok Sabha 2024
Name of State / UT : Tamilnadu

			(A)Pending criminal cases		(B)Details about cases of conviction for criminal offences		
SI No	Name of Constituency	Name of Candidate	Name of Court, Case No. & status of the case(s)	Sections of the Acts concerned & brief description of offence(s)	Name of Court & date(s) of orders(s)	Description of offence(s) & punishment imposed	Maximum Punishment imposed.
1.	(32) Madurai	S. Venkatesan	474/2019 D1 Tallakulam P.S. Madurai Town CRMP 3596/2021 J.M.2	IPC 143, 171(h), IPC 179 MV Act	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			CC 3066/2024 42 Additional Chief Metropolitan Magistrate, Bengaluru	IPC 153, 298, 500	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			WP (civil) 1001/2023 Supreme Court New Delhi	Writ petition (c)	Orders Not Passed	Not Applicable	Not Applicable
2.	(22) Dindigul	R. Sachithanantham	392/2023 Palani Town Police Station	IPC 143, 341, 281	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			1115/2021 Dindigul Town North P.S. C.C.No 80/2022 Cr.No.1115/2021 J.M.2 - Dindigul	IPC 143, 283, 286	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			831/2021 Dindigul Town North Police Station STC No. 1175/2023 CR.No 831/2021 J.M.2 - Dindigul	IPC 143, 283, 270	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			2484/2020 Dindigul Town North Police Station CC.59/2022 CR.No 2484/2020 J.M.2 - Dindigul	IPC 143, 283, 341, 269	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			2176/2020 Dindigul Town North Police Station CC.No.66/2022 CR.No 2176/2020 J.M.2 - Dindigul	IPC 147, 341, 269	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			1385/2020 Dindigul Town West Police Station STC No 2000/2023 CR 1385/2020 J.M 1 – Dindigul	IPC 143, 269	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			1083/2020 Thadikombu Police Station CC No.273/2020 CR.No 1083/2020 J.M.2 – Dindigul	IPC 143, 269	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			622/2018 Dindigul Town North Police Station CC.No. 666/2021 CR.No 622/2018 J.M.2 Dindigul	IPC 143, 188, 341 Railway act 1989 174 (a)	Orders Not Passed	Not Applicable	Not Applicable
			427/2018 Dindigul Town West Police Station CC.No 5/2020 CR.No 427/2018 J.M.1 0 Dindigul	IPC 143, 188	Orders Not Passed	Not Applicable	Not Applicable

kotak

கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் : 27 BKC, C 27, G-பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை-400051.
கிளை அலுவலகம் : 5வது தளம், A விங், சாம்சன் டவர்ஸ், எண். 420 L - பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600008.

பிற்சேர்க்கை - IV-A (பார்க்க - விதி 8(6) க்கான விதி விலக்கு)

ஏலம் மற்றும் விற்பனை அறிவிப்பு
அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6(2) & 8(6) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான ஏலம் மற்றும் விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(களுக்கும்), ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / அடகு வைக்கப்பட்டு, **கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட் (ஜாமீன் பெற்று கடனளித்தவர் / கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்)** ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் அன்று **அடையாள / இயற்சுவாதீனம்** எடுக்கப்பட்டு, **11.01.2017** அன்று எம்மால் இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள் / சொத்து, **1). திரு B சத்யா ஸ்ரீதரன்,** குடியிருப்பு முகவரி - A-11, லட்சுமி சாலை, TVS நகர், மதுரை-625003 **(கடன்தாரர் / சொத்துரிமையாளர்) மற்றும் 2). திருமதி ரெஜினா தேவி S (கூட்டு கடன்தாரர் / ஜாமீன்தாரர்)** குடியிருப்பு முகவரி - A-11, லட்சுமி சாலை, TVS நகர், மதுரை-625003 ஆகியோரால் ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு செலுத்தப்படவேண்டிய **14.03.2024** ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை **ரூ. 31,14,19,682.71/- (ரூபாய். முப்பத்து ஒரு கோடியே பதினான்கு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து அறுநூற்று எண்பத்து இரண்டு மற்றும் பைசா எழுபத்து ஒன்று மட்டும்)** மற்றும் ஒப்பந்த விகிதத்தில் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்காக **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். அசையாச்சொத்துக்களின் / சொத்தின் தெரிந்த வில்லங்கங்களுடன் கூடிய சுருக்கமான விபரங்கள் மற்றும் விற்பனைக்கான சில நிபந்தனைகளாவன:-

கடன் கணக்கு எண்	கடன்தாரர் / கூட்டு கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	அடிப்படை விலை (RP)	டெபாசிட்தொகை (RP யின் 10%) மற்றும் கடைசி தேதி	ஆய்வு தேதி & நேரம்	ஏல தேதி & நேரம்	மொத்த நிலுவைத்தொகை	தெரிந்த வில்லங்கம் (ஏதேனும் இருப்பின்)
கடன் கணக்கு எண். LAP 11978682 CNR No. 64519912	1. திரு B சத்யா ஸ்ரீதரன் மற்றும் 2. திருமதி. ரெஜினா தேவி S	23.10.2015 ரூ. 4,95,50,948.58/- (ரூபாய். நான்கு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து எட்டு மற்றும் பைசா ஐம்பத்து எட்டு மட்டும்)	ரூ. 4,30,00,000/- (ரூபாய். நான்கு கோடியே முப்பது இலட்சம் மட்டும்)	ரூ.43,00,000/- (ரூபாய். நாற்பத்து மூன்று இலட்சம் மட்டும்) / 18.04.2024 அன்று அல்லது அதற்கு முன்பு	15.04.2024 காலை 11.30 மணி முதல் பிற்பகல் 03.30 மணி வரை	19.04.2024 காலை 11.00 மணி முதல்	14.03.2024 ம் தேதியின் படி, ரூ. 31,14,19,682.71/- (ரூபாய். முப்பத்து ஒரு கோடியே பதினான்கு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து அறுநூற்று எண்பத்து இரண்டு மற்றும் பைசா எழுபத்து ஒன்று மட்டும்)	சட்டபூர்வ / அரசு நிலுவைகள் & கட்டிட நிர்வகிப்பு நிலுவைகள்

அசையாச் சொத்துக்கள்/ சொத்து விவரங்கள்: **அடமானத்தின் மீதான சொத்துக்கள் பின்வருமாறு: அட்டவணை "A":** மத்திய சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்கு சார்பதிவு மாவட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், டிவிஷன் எண். 105, அண்ணா சாலை (மவுண்ட் ரோடு) ப்ளாக் எண். 4, சர்வே எண். 26/2 (பகுதி) 26/3 (பகுதி) 27/2 (பகுதி)யில் அமையப்பெற்ற சென்னை -600002 அண்ணா சாலை, கதவு எண். 768 மற்றும் 769 யைக்கொண்டு **30745.37 சதுர மீட்டர்** அதாவது **3,30,820.18 சதுர அடி** பரப்பளவு கொண்ட இடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அவற்றுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **இடத்தின் எல்லைகளாவன** - ஸ்பென்சர் எஸ்டேட்ஸ் லிமிட்டெட் க்கு சொந்தமான சொத்து மற்றும் சர்வே எண். 26/1 க்கு - வடக்கு, சர்வே எண். 27/2 (பகுதி) க்கு - தெற்கு, அண்ணா சாலைக்கு - கிழக்கு, பொழுதுபோக்கு தேவைக்காக ஒதுக்கப்பட்ட திறந்த வெளி இடத்துக்கு - மேற்கு.

பட்டியல் "B" (இத்துடன் பரிமாற்றப்படும் சொத்து) இதன் மேற்கண்ட பட்டியல் A சொத்தில் உள்ள 16473/15,00,000 பாகம் (3633.067 சதுர அடி) பிரிபடாத பங்குடன் 16473 சதுர அடி கட்டிட பரப்பு கொண்ட சென்னை-600002, அண்ணா சாலை, கதவு எண். 768 மற்றும் 769 யைக்கொண்ட ஸ்பென்சர் ப்ளாசா ஃபேஸ் II, இரண்டாவது தளத்தில் உள்ள கடை எண். S77 & 79 என்ற சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இச்சொத்து ஆயிரம் விளக்கு சார்பதிவு மாவட்டம், சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.

ஏலமானது வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரரின் வலைதளம் M/s. C1 India Private Limited - ன் வலைதளம் www.bankeauctions.com மூலம் ஆன்லைனில் நடத்தப்படும்.

அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த நேரத்திலும் எக்காரணமும் கூறாமல் மின்னணு ஏலத்தை ரத்து செய்யும் முழு அதிகாரத்தை கொண்டுள்ளவராவார்.

மின்னணு ஏலத்துக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஆன்லைன் மின்னணு ஏல படிவம், அறிவிக்கை ஆகியவற்றை கொண்ட விலைப்புள்ளி ஆவணத்துக்கு www.bankeauctions.com & https://auctions.kotak.com/properties/auction-notices யை பார்வையிடவும் அல்லது **திரு. காருண் B (+91 9686812683), திரு. சந்திரசேகர் பாட்டீல் - (+91 9980993715)** ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.

தேதி : 01.04.2024
இடம் : சென்னை

ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்

HDFC BANK

ஹெச்.டி.எஃப்.சி பேங்க் லிமிடெட்

கிளை : முதல் தளம் ஐ.டி.சி. சென்டர், 760, அண்ணா சாலை, சென்னை – 600 002. CIN L65920MH1994PLC080618 Website : www.hdfcbank.com.

சொத்தினை கையகப்படுத்துதல் அறிவிப்பு

2002 – ம் ஆண்டின் செக்யூரடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் 2002 – ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3 – ன் கீழ் **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு NCLT- மும்பையால் 17 மார்ச் 2023 தேதியிட்ட உத்தரவின்படி முந்தைய ஹெச்.டி.எஃப்.சி லிமிடெட், ஹெச்.டி.எஃப்சி வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஹெச் டி எஃப் சி) நிறுவனத்தால், அதிகாரம் பெற்ற அதிகாரியாக (ஆதரைஸ்டு ஆபீசர்) நியமிக்கப் பட்டவர், கேட்புத் தொகை அறிவிப்பு (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் கீழே விவரிக்கப்பட்டுள்ள கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) – க்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கடன் ஒப்பந்தத்தில் கண்டுள்ள வட்டி விகிதத்தில் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுடன் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார்.

வ ரி சை எண்	கடனாளர் பெயர் (கள்)/ உடன் கடனாளர் (கள்) பெயர் (கள்)	மொத்த கடன் நிலுவைத் தொகை	ஈடு பெற்ற சொத்திருப்பு விவரம் (அசையாச் சொத்து) (1 ச.மீ என்பது 10.76 ச.அடிக்கு சமமானது)
1.	**திரு.G. ஆதிஷ் பாண்டியன் (கடனாளர்).** நெ. 3, தரை தளம், சுப்ரமணிய பாரதி, முதல் குறுக்குத் தெரு, அனகாபுத்தூர், சென்னை – 600070.	31 – மார்ச் – 2021* வரை ரூ.16,37,911/- கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி **04 - மே - 2021**	காஞ்சீபுரம் மாவட்டம், ஆலந்தூர் தாலுகா, அனகாபுதூர் கிராமம், பாரி நகர், சரஸ்வதி தெரு, சர்வே எண்கள். 249/2 மற்றும் 249/1A, பட்டா எண். 3665, பட்டாப்படி சர்வே எண். 249/1A & 249/2A1B – ல் மொத்தமாக உள்ள 187.45 ச.மீட்டர்கள் (2017 ச.அடி) நிலத்தில் மனை எண் C & D – ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம், முதல் தளம், ஃபிளாட் நெ. F4, 45.91 ச.மீட்டர்கள் (494 ச.அடி) கட்டிட ஏரியா (பொது ஏரியா உட்பட) மற்றும் 25.09 ச.மீட்டர்கள் (270 ச.அடி) பிரிபடாத பங்கு நிலம் மற்றும் 4-ல் 2 பங்கு அதாவது 96.84 ச.மீட்டர்கள் (1042 ச.அடி) பிரிபடாத பங்கு மற்றும் பொது நடைபாதை 48.42 ச.மீட்டர்கள் (521 ச.அடி) அளவுள்ள சொத்தின் எல்லைகள் : வடக்கு : மனை எண். B, தெற்கு : சர்வே எண். 249/1B, கிழக்கு : சர்வே எண். 250, மேற்கு : மனை எண். 10 மற்றும் 8-ன் பகுதி. அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில் 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில் 30 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில் 79 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில் 83 அடி 6 அங்குலம். மொத்தமாக 187.45 ச.மீட்டர்கள் (2017 ச.அடி) அளவுள்ள சொத்தானது தென் சென்னை மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் பம்மல் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **சொத்தினை கையகப்படுத்திய தேதி & வகை : 26 - மார்ச் - 2024 & Physical**

* **திரும்ப செலுத்தும் நாள்/சொத்தினை பணமாக்கும் வரையில் ஏற்படும் செலவுகள், கட்டணங்களும் சேர்த்து.**

கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) கேட்புத் தொகையினைச் செலுத்தத் தவறியதால் இச்சட்டப்பிரிவு 13 (4) மற்றும் மேற்படி ரூல்சின், விதி 8 –ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அடிப்படையில் கீழே கையொப்பமிட்டுள்ளவர் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கையகப்படுத்தி சுவாதீனம் பெற்றார் என்று கடனாளருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

எனவே இதில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் சம்பந்தமாக, குறிப்பாக கடனாளர் (கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) – ளும், மற்றும் பொதுமக்களும் எந்த விவகாரங்களிலும் ஈடுபடக்கூடாது என எச்சரிக்கப்படுவதோடு அப்படி ஈடுபடும் விவகாரங்களானவை ஹெச் டி எஃப் சியிடம் உள்ள அடமானம் மற்றும் அவருக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கும் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் உட்பட்டதாகும்.

சட்டத்தின் பிரிவு 13–ன் உட் பிரிவு (8) ன் படி அடமானம் பெற்ற கடனாளர் சொத்தினை மீட்டுக் கொள்வதற்கான கால அளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

கடன் பெற்றவர்கள் / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிகள் பஞ்சனாமா (Panchnama) – வில் வரையறுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் குறிப்பு நகல்களை (பொருந்தக்கூடிய இடங்களில்) அதிகாரம்பெற்ற அதிகாரியிடம் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தேதி : 01 – ஏப்ரல் – 2024 இடம் : சென்னை

HDFC பேங்க் லிமிடெட்டிற்காக ஒப்பம் அதிகாரம் பெற்ற அதிகாரி

பதிவு அலுவலகம் : HDFC பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை – 400013